www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# ஆதிபராசக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,மேல்மருவத்தூர்

## தமிழ்

## 2 மதிப்பெண் வினா விடைகள்

### பனிரண்டாம் வகுப்பு

1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழன் துணை வேண்டும் என்கிறார்?

**தமிழின் துணை:**

- தினமும் உடல் வருத்தி உழைப்பதால், சிவந்த கைகளை உடைய தொழிலாளரின் தோள் மீது காணப்படும் முத்துப் போன்ற உழைப்பின் பெருமையை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் சிற்பி.

2. கவிஞர் சிற்பி எத்தனை முறைச் சாகித்திய அகாதெமி விருது பெற்றார்?

- சாகித்திய அகாதெமி விருது: ( இரண்டு முறை)
- மொழிப்பெயர்ப்புக்காகவும் (அக்கினிசாட்சி)
- ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலிற்காகவும் இரு முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.

3. தமிழ் மொழியின் பழைமை நலம் எவை?

- தமிழ்மொழி பாண்டியனின் அவையில் செம்மொழியாய் ஆட்சி செய்தது.
- பாரி போன்ற வள்ளல்கள் பலரைத் தமிழ் மண்ணிற்குத் தந்தது.

4. நடை அழகியல் பற்றி தொல்காப்பியர் கூறும் கருத்தைக் குறிப்பிடுக?

- நடைபெற்றியலும் (கிளவி--26)
- கவிதையின் இயங் காற்றல்தான் நடை (தொல்)
- ஆசிரிய நடைத்தே வஞ்சி ___ஏனை
- வெண்பா நடைத்தே கலி ___ செய்--107

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5. ஒலிப்பின்னல் என்றால் என்ன?

- இசையோடும் இசைகருவியோடும்தான் மொழி சார்ந்த கவிதைப் பிறக்கிறது.
- ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வதை ஒலிப்பின்னல் என்கிறோம்.

6) அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் நூல்கள் யாவை?

- தண்டியலங்காரம்
- மாறனலங்காரம்
- குவலயானந்தம்

7) அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?

- தொல்காப்பியம்,
- வீரசோழியம்,
- இலக்கண விளக்கம்,
- தொன்னூல் விளக்கம்,
- முத்து வீரியம்.

8) பொருள் வேற்றுமை அணி ___ விளக்கம் தருக.

- இரு வேறு பொருள்களின் ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

9) எவ்வாறு எழுதினால் பிழைகளைத் தவிர்க்கலாம்?

- மொழியின் இயல்பை உணர்த்தும், இலக்கண விதிகளை அறிந்தும் கவனமுடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும்.
- சொல் உருவாகும் முறையை அறிந்தும் பொருள் வேறுபாட்டை உணர்ந்தும் எழுதும் போது பிழைகளைத் தவிர்க்க முடியும்.

10) நகரம் பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாகிறது ___ விளக்கம் தருக.

- பெய்த மழையால் நகர மாசுகள் அகன்றன.

www.Padasalai.Net

- மழைக்காலமாயினும் திடிரென வெளிப்பட்ட சூரிய வெளிச்சத்தால் புது பொலிவு பெறுகிறது.
- எனவே நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாய் விளங் குகிறது

11) மொழியின் அடிப்படைப் பண்புகள் எவை? அவை எதற்கு உதவும்?

- திணை, பால், எண், இடம் ஆகியவை மொழியின் அடிப்படைப் பண்புகளாகும்.
- சொற்களை விளக்குவதற் கும், பயன்படுத்துவதற்கும் இவை உதவும்.

12) புக்கில், தன்மனை ___ சிறுகுறிப்பு வரைக.

- தற்காலிகத் தங்குமிடம் அல்லது தற்காலிகப் புகலிடம் புக்கில் எனப்படும்.
- திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் தன்மனை எனப்படும்.

13) ‘மணந்தகம்” என்றால் என்ன?

- குடும்பத்தின் தொடக்கமாகத் திருமணம் புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கமே மணந்தகம் எனப்படுகிறது.

14) சிலம்புகழி நோன்பு என்பது என்ன?

- திருமணத்திற்குப்பின் மணப்பெண் கணவனுடைய இல்லத்திற்கு வரும்போது அவனுடைய தாய், பெண்ணிற்குப் பூச்சூட்டி, பழைய கன்னிச் சிலம்புகளைக் களைந்து, புதுச் சிலம்பு பூட்டுவது சிலம்புகழி நோன்பாகும்.

15) நிலையாமை குறித்துச் சவரி உரைக்கும் கருத் து யாது?

- இராமனைக் கண்டதால் தன் பொய்யான உலகப்பற்று அழிந்தது என்றும்.
- இவ்வளவு காலம் தான் மேற்கொண்டிருந்த தவம் பலித்துப் பிறவி ஒழிந்தது என்றும் கூறி, நிலையாமை குறித்த கருத்தை வெளிப்படுத்தினாள்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

16) அமலன் நேர்ந்த உரை யாது?

- உடன்வர விரும்பிய குகனைப் பார்த்து அமலன்," என் உயிர் போன்ற நீ என் இளவல், என் இளவல் இலக்குவன் உன் தம்பி,
- அழகிய நெற்றியையுடைய சீதை உன் அண்ணி,
- கடல் சூழ்ந்த உலகம் முழுமையும் உன்னுடையது.
- நான் உன் கட்டளைக்கு ஏற்ப பணிபுரிவேன் என்று உரைத்தான்.

17) ஞாலத்தின் மாணப் பெரிது எது?

- உரிய காலத்தில் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும் உலகத்தை விடமிகப் பெரியதாகும்.

18) பாடாண் திணை- விளக்கம் தருக?

- பாடு +ஆண் +திணை =பாடாண்திணை
- பாடப்படும் ஆண் மகனின் ஒழுகலாற்றைப் பற்றி கூறுவதால் பாடாண்திணை என்றானது.
- ஒருவருடைய புகழ், கொடை, சிறப்பு, அருள் முதலிய நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

19) அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

**தமிழில்,**

- நிகண்டு,
- நன்னூல்,
- தண்டியலங்காரம்,
- நீதிநூல்கள்,
- காரிகை.

**கணிதத்தில்,**

- கீழ்வாயிலக்கம்
- மேல்வாயிலக்கம்
- குழிமாற்று

www.Padasalai.Net

20) எழுத்தாணிகளின் பேதங்கள் யாவை?

- ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பல வகைகள் உண்டு.
- எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவர்.
- வகைகள்: மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என மூவகைப்படும்.

21) எவற்றை மறக்கக் கூடாதது, எவற்றை மறக்கக் கூடியது?

**மறக்கக் கூடாதது:**

- ஒருவர் நமக்குச் செய்த நன்மையை (உதவியை) மறக்கக் கூடாது.

**மறக்கக் கூடியது:**

- பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

22) வசனம், கவிதை வேறுபாடு தருக.

- சொற்களைச் சிறந்த முறையில் அமைப்பது வசனம்.
- சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் அமைப்பது கவிதை.

23) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகைய உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

- இறைவனின் திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவு தனக்கு வேண்டும் என்கிறார் வள்ளலார்.

24) இறைவனிடம் வள்ளலார் தனக்கு வேண்டாம் என வேண்டுவன யாவை?

- வஞ்சகர் உறவு:
- தன் மனதில் ஒன்றை நினைத்துக் கொண்டு வெளியில் வேறொன்றாகப் பேசும் வஞ்சகர்களின் உறவு தனக்கு வேண்டாம்
- பொய்,
- மதமான பேய்,
- பெண்ணாசை

இவையெல்லாம் தனக்கு வேண்டாம் என இறைவனிடம் வேண்டுகிறார்,

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

25) கலிவிழா,ஒலிவிழா ___ விளக்கம் தருக.

**கலிவிழா:**

- எழுச்சி தரும் விழா
- மக்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் கொண்டாடப்படும் விழா

**ஒலிவிழா:**

- ஆரவாரவிழா
- வாழ்த்துப்பாடல்களின் இசையும் ஆரவாரங்களோடு கொண்டாடும் விழா.

26) காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

காப்பியம் இரண்டு வகைப்படும்,அவை

- 1.பெருங்காப்பியம்
- 2.சிறுகாப்பியம்

27) மனத்தை அதன் போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?

- தீமையில் இருந்து விலக்கி, நல்ல வழியில் செலுத்த, மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல் காக்கவேண்டும் என வள்ளுவம் கூறுகிறது.

28) மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?

- நல்ல செயல்பாட்டிற்கு மன உறுதியே வேண்டும். மற்றவை எல்லாம் பயன்படாது.

29) பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

- பகைவராலும் அழிக்க முடியாத அரண் அறிவு ஆகும்.
- ஏனெனில் அறிவு ஒருவனுக்கு அழிவு வராமல் காக்கும் கருவியாகும்.

30) அஞ்சத் தகுந்தன, அஞ்சத்தகாதன என வள்ளுவர் குறிப்பிடுவது யாது?

**அஞ்சத் தகுந்தன:**

www.Padasalai.Net

- உறவுடையவர் போல் நடித்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்சவேண்டும்.

**அஞ்சத் தகாதன:**

- வாளைப்போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவருக்கு அஞ்ச வேண்டியதில்லை.

31) வறுமையும் சிறுமையும் தருவது எது?

- ஒருவருக்கு வறுமையும் சிறுமையும் தருவது சூது.

32) பருவத்தே பயிர் செய்"- நேர மேலாண்மைப் பொருத்தி எழுதுக.

- ஏற்ற காலம் அறிந்து ஏற்ற இடத்தைத் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் கைகூடும் என்பதாகும்.

33) அறிவுடை வேந்தனின் நெறி குறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?

- அறிவுடை வேந்தன், மக்களிடம் வரி திரட்டும் நெறிமுறை அறிந்து வரியைத் திரட்டினால், நாடு பெருஞ்செல்வத்தைப் பெற்றுச் செழிப்படைவதோடு அவன் எண்ணமும் நிறைவேறும் எனப் பிசிராந்தையார் கூறுகிறார்.

34) செவியறிவுறூஉ துறையை விளக்குக.

- அரசன் தவறுதலாகச் செயல்பட நேரும்போது செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யும் வகையில், அரசனுக்கு அறிவுரையாகக் கூறுவது —செவியறிவுறூஉத்துறையாகும்.

35)ஒருமுக எழினி, பொருமுக எழினி குறிப்பு வரைக:

- ஒரு புறத்திலிருந்து மறு புறத்திற்குச் செல்லுமாறு அமைக்கப்படும் திரை ஒரு முக எழினி
- நாடகமேடையின் இரு புறத்திலிருந்தும் நகர்த்தப்பட்டு, நடுவில் ஒன்றோடு மற்றொன்று பொருந்துமாறு அமைக்கப்படும் திரை பொருமுக எழினி

36) இறை மகனாரின் இன்னலைக்கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

- இறைமகன் இயேசுவிற்கு பொல்லாத யூதர்களும், போர் சேவகர் கூட்டமும் துன்பத்தையும் வேதனையையும் கொடுமைகளையும் செய்தனர்.
- இக்கொடுமைகளைக் கண்ட மக்கள் இன்னும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே, வானம் இடிந்து விழவில்லையே, கடல்நீர் வற்றிக் காணாமல் போகவில்லையே இன்னும் உலகம் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ? என்று அழுது புலம்பினர்.

37)கவிதையின் நடையியல் கூறுகளில் முக்கியமானவை எவை?

- ஒலிக்கோலங்கள்,சொற்புலம் ,தொடரியல் போக்குகள் இம்மூன்றும் கவிதையின் நடையியல் கூறுகளில் முக்கியமானவை.

38)கவிதை மறுதலைத் தொடர் குறிப்பு வரைக:

- உரைநடை மற்றும் பேச்சு மொழியல் தொடரைப்பு என்பது எழுவாய் செயப்படுபொருள் பயனிலை என அமைவதே மரபு .ஆனால் சங்கப்பாடல்கள் பலவற்றில் இது பிறழ்ந்து வருகின்றது.இதையே கவிதை மறுதலைத் தொடர் என்கிறோம்.

39)கலை முழுமை என்றால் என்ன?

- இலக்கியத்தின் "பயன் "பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு.
- இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகள் கலை ஒருவாக்கத்தின் பொதே சரிவர இணைந்திருக்க வேண்டும். இதுவே கலை முழுமை எனப்படும்.

40) தருமமிகு சென்னையில் கந்தக் கோட்டத்துள் வளர் தலமோங்கு கந்த வேளே- தொடருக்கு பதவுரை எழுதுக:

- அறம் பல செய்பவர்கள் நிறைந்திருக்கும் சென்னையில், கந்தக்கோட்டம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தலைவனான கந்தனே.

www.Padasalai.Net